
Lenovo

# சேலம் மாவட்டம்

## *ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர்*

மாணவர் வங்கி:

ஒவ்வொரு நாள் காலையிலும் 8.50 முதல் 9.30 வரை இங்கு முகமது சஜித் என்ற மாணவரைக் காசாளராகக் கொண்டு மாணவர் வங்கி இயங்கி வருகிறது. இதற்கென மடிக்கணினியில் பிரத்யேகமான Microsoft Excel மென்பொருளில் தனிப் படிவம் தயாரிக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் ரூ.1 முதல் தங்களால் இயன்ற அளவு சேமிக்கிறார்கள். இவ்வங்கியின் மேலாளராக கணித ஆசிரியர் பெ.பிரபாத் செயல்பட்டு வருகிறார். பள்ளியில் தற்போது பயிலும் மாணவர்கள் மட்டுமின்றி முன்னாள் மாணவர்கள் கூட இவ்வங்கியில் கணக்கு வைத்து சேமித்து வருகிறார்கள்.

தலைமை ஆசிரியர் மா.சாந்தி மாணவர்களுக்கு முன்னுதாரணமாக இவ்வங்கியில் கணக்கு தொடங்கி சேமித்து வருகிறார். இதன்மூலம் *மாணவர்களின் சேமிக்கும் பழக்கம் வளர்வதோடு பணத்தை நிர்வகிக்கும் ஆற்றலும் வளர்கிறது.*